## தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - சுருக்கெழுத்துத் தட்டச்சர் - உதவியாளர்களாக பணியமர்த்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பி) துறை**

அரசாணை (நிலை) எண். 34 நாள்: 21.2.2001

படிக்கப்பட்டது:

(1) அரசு ஆணை நிலை எண். 256 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பி) துறை, நாள் 1.8.92

(2) அரசு ஆணை நிலை எண். 284 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பி) துறை, நாள் 19.8.92

(3) அரசு ஆணை நிலை எண். 93 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பி) துறை, நாள் 8.4.94

(4) அரசுக் கடித எண். 89237/92-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பி) துறை, நாள் 23.11.92

(5) அரசுக் கடித எண். 99059/92-2, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பி) துறை, நாள் 28.1.93.

(6) அரசு ஆணை நிலை எண். 417 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பி) துறை, நாள் 1.12.93.

(7) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை செயலரின் நேர்முகக் கடித எண். 42647/கே/2000-1 நாள் 8.8.2000.

**ஆணை**

பார்வை ஒன்று, இரண்டு மற்றும் மூன்றில் காணும் அரசாணைகளின்படி, தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் என்று ஒரே இணமாக இருந்த பதவி பிரிக்கப்பட்டு தனித்தனி இனமாக்கப்பட்டன. பின்னர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவியிலேயே பதவி உயர்வு பெற ஏதுவாக, சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III, சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை II, மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை I, என்ற பதவிகள் உயர் ஊதிய விகிதத்தில் ஏற்படுத்தப்பட்டன. மேலும், சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவிக்கு அனுமதிக்கப்பட்ட புதிய ஊதிய விகிதத்தில் 1.6.88 முதல் ஊகமாக (Notionally) ஊதியத்தை நிர்ணயித்து 1.4.92 முதல் பணப்பயன் பெறவும் வகை செய்யப்பட்டது. பார்வை நான்கில் காணும் கடிதத்தில் சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III -இல் பணியாற்றுபவர்கள் உதவியாளராக பணியாற்ற கருதப்பட மாட்டார்கள் என்றும், பின்னர், ஒரு சில ஆண்டுகள் சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III -இல் பணியாற்றியபின் கண்காணிப்பாளராக பதவி உயர்வு அளிக்க கருதப்படுவார்கள் என கடிதம் ஐந்தில் அறிவுறுத்தப்பட்டது. பார்வை ஆறில் காணும் அரசாணையில், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் உதவியாளர்களாக பணியமர்த்த கருதப்படமாட்டார்கள் என்றும் ஆணையிடப்பட்டது.

2. இந்நிலையில், 5.8.2000 அன்று நடைபெற்ற 55-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநாட்டில் அமைச்சுப் பணியாளர்களில் ஓர் அங்கமாக உள்ள சுருக்கெழுத்துத் தட்டச்சர்களுக்கு தடை செய்யப்பட்டுள்ள உதவியாளர் பதவியை மீண்டும் வழங்கிட வேண்டும் என்ற தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,

"சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் உதவியாளர்களாக பதவி உயர்வு பெற இருந்து வந்த தடை உடனடியாக நீக்கப்படுகிறது" என அறிவித்தார்.

3. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

(i) சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III-இல் பணியாற்றுபவர்களுக்கு, உதவியாளராக பணிநியமனம் பெறுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை 5.8.2000 முதல் நீக்கப்படுகிறது.

(ii) தமிழ்நாடு அமைச்சுப் பணியில், இளநிலை உதவியாளர் பதவியிலிருந்து, உதவியாளராக பதவி உயர்வு பெற, சுமார் பத்தாண்டுகள் ஆகிறது. எனவே, சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III பதவியில் பணியாற்றுபவர்களுக்கு உதவியாளராகப் பணி நியமனம் பெற, 1.8.92 முதல் தடை விதிக்கப்பட்டுள்ளதால், இந்த இடைப்பட்ட எட்டு ஆண்டு காலப் பணியினையே, சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவியில் தகுதி காலமாக நிர்ணயித்து, உதவியாளராக பணியமர்த்தக் கருதுதல் வேண்டும்.

(iii) சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III -இன் ஊதிய விகிதமும், உதவியாளர் ஊதிய விகிதமும் ஒன்றாக உள்ளதால், பணிமாற்றல் முறை மூலம் பணி நியமனம் அளிக்கக் (By Transfer) கருதுதல் வேண்டும்.

(iv) உதவியாளர் தேர்ந்தப் பெயர் பட்டியல் தயாரிக்க நிர்ணய நாள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் திங்கள் 15-ஆம் நாளாகும். எனவே, 2001-2002 ஆம் ஆண்டிற்கு 15.3.2001 -ஐ நிர்ணய நாளாகக் கொண்ட பட்டியலாண்டில் சேர்த்து பணியமர்த்தக் கருதுதல் வேண்டும்.

(v) இவ்வாறு உதவியாளராகப் பணியமர்த்தக் கருதுமுன்னர், தற்போது சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III பதவியில் பணியாற்றிக் கொண்டிருக்கும் நபர்களிடம், சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவியிலேயே தொடர்ந்து சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை II ஆக பதவி உயர்வு பெற்று பணியாற்ற விரும்புகிறார்களா அல்லது உதவியாளர்களாகப் பணியாற்ற விரும்புகிறார்களா என விருப்பத் (Option) தெரிவினை அந்தந்த நிலையில், எந்த விதமான பதவி உயர்வு முன்னர் நிகழுமோ அந்நாளில் முடிவான விருப்பம் பெற்று, அதற்கேற்ப பணியமர்த்தக் கருதுதல் வேண்டும்.

(vi) சுருக்கெழுத்துத் தட்டச்சர்களுக்கு முறையாக உதவியாளர் மற்றும் தட்டச்சர் போன்று உதவியாளர்களாக பதவி உயர்வு மூலம் (By Promotion) பதவி உயர்வு அளிக்கக் கருத இயலாது. ஏனெனில்,

சுருக்கெழுத்துத் தட்டச்சர் III ஆம் நிலை ஊதிய விகிதமும், உதவியாளர் ஊதிய விகிதமும் ஒன்றாக இருப்பதால், பொது விதி 4-இன் படி, பணிமாறுதல் மூலமே (By Transfer) பணியமர்த்த கருத இயலும். எனவே, இவ்வாறு ஒத்த ஊதியத்தில் பணியாற்றிவரும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்களையும், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்களுடன் சேர்த்து உதவியாளர்களாக பதவி உயர்வு அளிக்கக் கருதுவது முறையாக அமையாது. எனவே, ஒரு காலி பணியிட மதிப்பீட்டு (Estimate of vacancy) ஆண்டில் (Panel year) உதவியாளர் பதவியில், ஒரு துறையில் எற்படும் காலி பணியிடங்களில் 5 விழுக்காடு அளவிற்கு சுருக்கெழுத்துத் தட்டச்சர்களுக்கு உதவியாளர்களாக பணிமாற்றம் அளிக்கக் கருதுதல் வேண்டும்.

4. தமிழ்நாடு அமைச்சுப் பணியின் சிறப்பு விதிகளுக்கு விதித் திருத்தம் தனியே வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஏ.பி. முத்துசாமி
அரசு தலைமைச் செயலாளர்